මගේ අංකය
எனது இல.
My No.

ඔබේ අංකය
உமது இல.
Your No .

දිනය
திகதி
Date.

ශ්‍රී ලංකා මානව හිමිකම් කොමිෂන් සභාව
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு
Human Rights Commission of Sri Lanka

## 2020 பாராளுமன்றத் தேர்தலில் போட்டியிடும் அரசியல் கட்சிகள் ∴ சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்களுக்கு விடுக்கும் வேண்டுகோள்

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, 1996 ஆம் அண்டின் 21 ஆம் இலக்க மனித உரிமைகள் ஆணைக்குழுவின் சட்டத்தினூடாக நிறுவப்பட்டு இலங்கை அரசியலமைப்பில் மேற்கொள்ளப்பட்ட 19 ஆவது சட்டத் திருத்தத்தின் ஊடாக இலங்கை அரசியலமைப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளது. சுயாதீன தேசிய நிறுவனமொன்றான இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவானது நாட்டில் வாழும் அனைவரதும் மனித உரிமைகள் உறுதிப்படுத்தப்பட்டு மனித உரிமைகள் கலாசாரமொன்றை நாட்டில் ஏற்படுத்தும் நோக்கில் செயற்படுகின்றது.

2020.06.03 ஆம் திகதிய, 2178/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி ஊடாக இலங்கை தேர்தல் ஆணைக்குழுவினால் வெளியிடப்பட்டுள்ள "தேர்தல்களின்போது போட்டியிடுகின்ற அரசியல் கட்சிகள் / சுயேச்சைக் குழுக்களின் வேட்பாளர்கள் பின்பற்ற வேண்டிய ஒழுக்கநெறிக் கோவை" சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தனது விசேட கவனத்தைச் செலுத்தியுள்ளது.

இம்முறை பாராளுமன்றத் தேர்தல் சம்பந்தமாக இலங்கை தேர்தல் ஆணைக்குழுவினால் மிகவும் விரிவான வகையில் ஒழுக்கநெறிக் கோவையொன்று பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. அது சம்பந்தமாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு என்ற வகையில் நாம், எமது பாராட்டுக்களைத் தெரிவித்துக்கொள்வதுடன், இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, அதன் 'ஆ. பொது நடத்தைகள் 01.' மீது விசேட கவனத்தை செலுத்துகின்றது. அதற்கமைய,

> *"இலங்கையர்கள், அனுஷ்டிக்கின்ற சமயங்கள், பேசுகின்ற மொழிகள், அவர்களின் இனங்கள், பழக்க வழக்கங்கள் மற்றும் குல கோத்திரங்கள் போன்ற வேறுபாடுகள் தொடர்பாக இனப் பிரிவொன்று அல்லது ஆட்களிடையே பகைமையுணர்ச்சி (வெறுப்புணர்ச்சி) மற்றும் பொறுமையின்மையை தூண்டும் விதத்தில் அல்லது நடந்துகொள்வதனைத் தவிர்த்துக்கொள்ளல் மற்றும் அவ்வாறான உணர்வுகளை ஏற்படுத்தவல்ல அல்லது தூண்டவல்ல விதத்திலான கருத்துக்களை அல்லது விடயங்களை வெளியிடாதிருத்தல்."*
>
> **மூலம்: 2020 ஜுன் மாதம் 03 ஆம் திகதிய 2178/25 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானி**

இதனூடாக இலங்கை சமூகத்தில் நிலவும் சமூக ரீதியிலான வேறுபாடுகளை அடிப்படையாகக்கொண்டு ஏதேனுமொரு தரப்பை இலக்காகக்கொண்டு வெறுப்பூட்டும் அல்லது பொறுமையின்மையை தூண்டும் விதத்தில் அல்லது நடந்துகொள்வதனைத் தவிர்த்துக்கொள்ளல் மற்றும் அவ்வாறான உணர்வுகளை ஏற்படுத்தவல்ல விதத்திலான கருத்துக்களை அல்லது விடயங்களைத் தெரிவிப்பதனைத் தவிர்த்துக்கொள்ளுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது. சமூக ரீதியிலான வேறுபாடுகளை பேதமொன்றாக வெளிக்கொணர வேண்டாமெனவும் இங்கு விடயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த ஒழுக்கநெறிக் கோவை சம்பந்தமாக நோக்கும்போது, அதில் (ஊ) வெறுப்பூட்டும் வெளிப்படுத்துகைகள் அல்லது தேசிய ஐக்கியத்திற்கு எதிரான வெள்ப்படுத்துகைகள் 01. மீது தங்களது கவனத்தை ஈர்க்கச் செய்கின்றோம். இந்த ஒழுக்கநெறியில் பெண்கள், விசேட

ප්‍රධාන කාර්යාලය / தலைமைக் காரியாலயம் / Head Office: 14, ආර්. ඒ. ද. මෙල් මාවත, කොළඹ - 04. / 14, ஆர்.ஏ.த.மெல் மாவத்தை, கொழும்பு-04. / 14, R.A.De Mel Mawatha, Colombo - 04.
දුරකථන / தொலைபேசி: 94-11- 2505580/81/82
සභාපති / தவிசாளர் / Chairperson: 011-2505451
ලේකම් / செயலாளர்: 011-2505521
ෆැක්ස් / தொலைநகல் / Fax: 011 2505541/74
ක්ෂණික / துரித அமைப்பு: 011-2505575
විද්‍යුත් තැපැල / மின்னஞ்சல் / E-mail: sechrcsl@gmail.com
වෙබ් / இணையம்: www.hrcsl.lk

தேவைப்பாடுகளை உடையவர்கள், வித்தியாசமான பால்நிலை அடையாளத்தை கொண்டவர்கள் மற்றும் பிற சமய அல்லது இனக் குழுக்கள் மீது கவனம் செலுத்தப்பட்டுள்ளது. அவற்றில் சில விசேட விடயங்கள் மீது முக்கிய கவனம் ஈர்க்கப்பட்டுள்ளது. அதாவது

01. மேலே குறிப்பிடப்பட்ட சமூகத்தில் நிலவும் வேறுபாடுகளின் அடிப்படையில் எந்தவொரு சமூக அல்லது பிரஜைகள் குழுக்களை பயமுறுத்தும் அல்லது அவமதிக்கும் எந்த விதத்திலுமான வெறுப்பூட்டும் வெளிப்படுத்துகைகளை தவிர்த்தல் வேண்டும்.
02. இனக் குழுக்கள் மற்றும் சமயக் குழுக்களிடையே நிலவும் நட்புறவு மற்றும் பரஸ்பர நம்பிக்கைக்கு ஊறு (குந்தகம்) விளைவிக்கக்கூடிய விதத்திலான எந்தவொரு வெளிப்படுத்துகைகளை தவிர்த்தல் வேண்டும்.
03. இன அல்லது சமயக் குழுக்களினதும் நபர்களினதும் அபிமானத்திற்கு ஊறு விளைவிக்கக்கூடிய அல்லது பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை தவிர்த்தல் வேண்டும்.
04. மேலே குறிப்பிடப்பட்ட இலங்கை சமூகத்தில் நிலவும் வேறுபாடுகளை அடிப்படையாகக்கொண்டு எந்தவொரு நபருக்கு அல்லது குழுவுக்கு பாதிப்பை ஏற்படுத்தக்கூடிய அல்லது பாகுபாடு காட்டப்பட முடியுமான நடவடிக்கைகளை தவிர்த்தல் வேண்டும்.
05. பெண்களுக்கு அல்லது விசேட தேவைப்பாடுகளைக்கொண்ட நபர்களுக்கு அவமானப்படக்கூடிய அல்லது கீழ்த்தரமான விதத்தில் நடவடிக்கைகளை மேற்கொள்வதனைத் தவிர்த்தல் வேண்டும்.

இந்த ஒழுக்கநெறிகளில் இலங்கை சமூகத்தில் நிலவும் பன்முகத்தன்மையை (பல்வகைமையை) அடிப்படையாகக்கொண்டு மேற்கொள்ளப்படுகின்ற மேலே குறிப்பிடப்பட்ட செயற்பாடுகளின்போது அவை மேற்கொள்ளப்படும் விதமும் விரிவாகக் குறிப்பிடப்பட்டுள்ளன. அதாவது, வெறுப்பூட்டும் வெளிப்படுத்துகைகளை மேற்கொள்ளாதிருத்தல், உருவப்படங்களை காட்சிப்படுத்துவதனைத் தவிர்த்தல், கூற்றுக்கள் பிரச்சாரத்தை தவிர்த்தல் மற்றும் அவ்வாறான செயற்பாடுகளை மேற்கொள்வதனைத் தவிர்த்தல் என்பவற்றைக் குறிப்பிட முடியும்.

இந்த ஒழுக்க நெறிக் கோவையில் குறிப்பிடப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்டுள்ள விடயங்கள் வெறுமனே தேர்தலை இலக்காகக்கொள்ளப்பட்டு வெளியிடப்பட்டவைகளாக இருப்பினும் அவை எமது அடிப்படைச் சட்டமான இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படை உரிமைகள் அத்தியாயத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளன. அதில் 12 (2) உறுப்புரை ஊடாக இனம், மதம், மொழி, குலம், பாலினம், அரசியல் கருத்து அல்லது வேறு ஏதேனும் காரணத்தினால் பிரஜைகள் பாரபட்சத்திற்கு ஆளாக்கப்படக்கூடாதென குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, இந்த ஒழுக்கநெறிகளை அவமதித்தல் வெறுமனே ஒழுக்கநெறிகளை மீறுதல் மாத்திரமன்றி இலங்கை அரசியலமைப்புச் சட்டத்தின் 12 (2) உறுப்புரையை மீறிச் செயற்படுவதாகக் கருத முடியும்.

எனவே, இந்த ஒழுக்கநெறிக் கோவை ஊடாக இனங்கண்டுகொள்ளப்பட்ட விடயங்களை நாட்டின் பிரதிநிதித்துவ ஜனநாயகத்தின் உயிரோட்டத்தை பாதுகாத்துப் பேணி வருவதற்காக தேர்தல் காலப் பகுதியின் பின்னரும் பாதுகாப்பதற்காக அரசியல் கட்சிகள் / சுயேச்சை குழுக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் வேட்பாளர்கள் என்ற வகையில் தங்களுக்கு பாரிய பொறுப்பொன்று ஒப்படைக்கப்பட்டுள்ளது. இலங்கையில் நிலவும் பாராளுமன்ற ஜனநாயகத்தில் 05 வருடங்களுக்கு மக்கள் பிரதிநிதியாக அந்த மக்களுக்கான சட்டங்களை உருவாக்குவதற்காக தாங்கள் மக்கள் ஆணையை எதிர்பார்த்து மக்களிடம் செல்லும் இச்சந்தர்ப்பத்தில் மிகவும் அமைதியான, பாதுகாப்பான, அனைவருக்கும் சம மதிப்பளிக்கும் சமூக சூழலை ஏற்படுத்துவதற்கு இந்த ஒழுக்கநெறிகளுக்கமைய நடவடிக்கை மேற்கொள்ளுதல் மிகவும் பயன்மிக்கதாக அமையும்.

**கலாநிதி தீபிக்கா உடகம**
தவிசாளர்
இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு.

2020 ஜூலை மாதம் 21 ஆம் திகதி